**முருங்கைக்காய் விலை உயர்வு**

First Published : 05 Sep 2011 08:32:28 AM IST

வெள்ளக்கோவில், செப். 4: வெள்ளக்கோவிலில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாரச் சந்தையில், முருங்கைக்காய் விற்பனை விலை கடந்த வாரத்தை விட அதிகமாக இருந்தது.

வெள்ளக்கோவில் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள், தண்ணீர் அதிகம் தேவைப்படாத முருங்கை வகைகளை அதிகளவில் பயிரிட்டுள்ளனர். முற்றிய காய்கள் அனைத்தும் வெள்ளமடை, தாசவநாய்க்கன்பட்டியிலுள்ள தாற்காலிக வாங்கும் இடத்தில் கிலோ கணக்கிலும், வாரச் சந்தைகளில் எண்ணிக்கை அடிப்படையிலும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரத்தை விட வரத்து குறைந்திருந்த நிலையில் கிலோ ரூ.10 வரையிலும், சுமார் 800 காய்கள் கொண்ட மூட்டை ரூ.600 வரையிலும் விலை போனது. கடந்த வாரத்தில் மூட்டை ரூ.150-க்கு விற்பனையானது.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். வாரச் சந்தைக்கு சுமார் 100 மூட்டை முருங்கைக் காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.

**முட்டை விலை**

First Published : 05 Sep 2011 09:12:05 AM IST

நாமக்கல், செப்.4: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.52, சென்னையில் ரூ. 2.57. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள் முதல் விலை கிலோ ரூ.53, முட்டைக் கோழி கிலோ ரூ.40.

**திருந்திய நெல் சாகுபடி முறை: விவசாயிகளுக்கு மானியம்**

First Published : 05 Sep 2011 09:10:13 AM IST

திருச்செங்கோடு, செப் 4: திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் ஒற்றை நாற்று நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. இது குறித்து பள்ளிப்பாளையம வேளாண் உதவி இயக்குனர் பா. முரளீதரன் கூறியது:- பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் மேட்டூர் கால்வாய் பாசனம் மூலம் 10 ஆயிரம் ஏக்கரில் சம்பா பட்ட நெல் சாகுபடி தீவிரமடைந்துள்ளது. நடப்பு

ஆண்டில் தமிழக அரசின் சிறப்பு திட்டமான திருந்திய நெல் சாகுபடி முறை மூலம் ஒற்றை நாற்று செயல் விளக்கத் திடல்கள் 170 அமைக்கப்படவுள்ளன. இவை பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் முக்கியசாலை ஓரங்களில் அமைக்கப்பட்டு மற்ற விவசாயிகளும் பார்வையிட வசதியாக உள்ளது.

திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மார்க்கர் மற்றும் கோனோவீடர் கருவிகள் வழங்கப்படவுள்ளன. மேல் விபரம் தேவைப்படுவோர் பள்ளிப்பாளையம் சிறப்பு அலுவலர் குழுவை அணுகலாம். அல்லது 04288 242996 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என்றார் முரளீதரன்.

**தாந்தோன்றி வட்ட பகுதியில் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 04 Sep 2011 01:12:14 PM IST

கரூர், செப். 3: கரூர் மாவட்டம், தாந்தோன்றி வட்ட பகுதியில் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாம் அண்மையில் நடத்தப்பட்டது.

தாந்தோன்றி வட்டப் பகுதியில் காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பினையும், உற்பத்தியையும் அதிகரிக்க காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் முக்கிய கிராமங்களில் ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி முகாம் நடத்துமாறு கரூர் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் வி. சதாசிவம் உத்தரவுப்படி இப்பகுதியில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, கொடையூர் மற்றும் தம்மநாயக்கன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற முகாம்களில் தாந்தோன்றி வட்ட தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் கலந்து கொண்டார். கொடையூரில் மரவள்ளி பயிரில் மாவுப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து அவர் கூறினார். இதில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானிய விலையில் மிளகாய், தக்காளி, மற்றும் அரைக்கீரை போன்ற காய்கறி விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

இதுபோல் தம்மாநாயக்கன்பட்டியில் நடந்த முகாமில் வெங்காய சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய புதிய தொழில்நுட்ப உத்திகள் குறித்தும், மானிய விலையில் மா, கொய்யா போன்ற பழ மரக்கன்றுகளும், கருவேப்பிலை, மல்லிகை தக்காளி, மிளகாய் மற்றும் கீரை வகைகள் போன்ற பல்வேறு வகை பயிர்களின் விதைகள் 50 சதம் மானிய விலையில் விநியோகிக்கப்படும் விவரம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

செல்லாண்டி பாளையத்தில் நடைபெற்ற முகாமில் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் வி. சதாசிவம் கலந்து கொண்டு, துல்லிய பண்ணையத் திட்டத்தில் காய்கறிகள் சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பங்கள் குறித்த விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார். மேலும், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 50 சதம் மானிய விலையில்

காய்கறி விதைகளை வழங்கினார். இதில் பள்ளபாளையம் துல்லிய பண்ணைய சங்கத்தைச் சேர்ந்த காய்கறி சாகுபடி செய்யும் விசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிச்சக்கவுண்டனூரில் நடத்தப்பட்ட ஆடிப்பட்ட காய்கறி சாகுபடி பயிற்சி முகாமில், தாந்தோன்றி வட்ட தோட்டக்கலை அலுவலர் ஆ. நடராஜன் கலந்து கொண்டு, முருங்கை சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். மேலும், உயர் தொழில்நுட்ப உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் காய்கறி பயிர்கள் சாகுபடிக்கு மானிய விலையில் விதைகள் விநியோகிக்கப்படும் விவரம் குறித்து பேசினார்.

மேலும், விவசாயிகளுக்கு தோட்டக்கலைப் பயிர்களுக்கு மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்படுவது குறித்து எடுத்துக் கூறப்பட்டது.

முகாமுக்கான ஏற்பாடுகளை தாந்தோன்றி வட்ட உதவி வேளாண்மை அலுவலர்கள் கு. கல்யாணசுந்தரம், இரா. பாலசுப்பிரமணியன், க. பரமேஸ்வரன் மற்றும் ஆ. செந்தில்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

இம் முகாம்களால், தாந்தோன்றி வட்டத்தில் நடப்பாண்டில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படும் பரப்பு மற்றும் உற்பத்தியும் அதிகரிக்க வழிவகுக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**சுற்றுச்சூழல் மேம்பாட்டு பயிற்சி முகாம்**

First Published : 04 Sep 2011 01:12:32 PM IST

கரூர், செப். 3: திருச்சியில் அண்மையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மேம்பாட்டு பயிற்சி முகாமில் கரூர் பி.ஏ. வித்யாபவன் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 8-வது ஆண்டாக கரூர் பி.ஏ. வித்யாபவன் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டனர்.

இதில் சுற்றுச்சூழல் ஆய்வகம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த ஒளி, ஒலி படக் காட்சிகள் மற்றும் அரிய மருத்துவ குணங்கள் கொண்ட தாவரங்களும் அதன் பயன்களும் குறித்த விளக்கம் அளிக்கப்பட்டது.

இதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது.

இந்த சுற்றுச்சூழல் குழுவின் ஒருங்கிணைப்பாளர்களாக பள்ளியின் ஆசிரியர்கள் வி.பிரபாகரன், பி.ரவிச்சந்திரன் ஆகியோர் செயல்பட்டனர்.

இந்த பயிற்சி முகாமில் பள்ளி ஆசிரியர்கள் இரா. நாராயணசாமி, ஆர்.சிந்தாமணி, க. ஸ்டாலின், த. சுஜிதா, ஆ. தேன்மொழி, க. நிர்மலா மற்றும் 110 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் விநாயகர் சிலைகள் கரைப்பு

பெரம்பலூர்/அரியலூர், செப். 3: பெரம்பலூர் மாவட்டத்தில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வைக்கப்பட்டிருந்த 43 விநாயகர் சிலைகள் சனிக்கிழமை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு காவிரி ஆற்றில் கரைக்கப்பட்டது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் வி. களத்தூர் மற்றும் கை. களத்தூர் காவல் நிலையங்களுக்கு உள்பட்ட பகுதிகளில் தலா 2 சிலைகளும், அரும்பாவூர் காவல் நிலையத்துக்குள்பட்ட பகுதிகளில் 5 சிலைகளும், பாடாலூர் காவல் நிலையத்துக்குள்பட்ட பகுதிகளில் 19 சிலைகளும், மருவத்தூர், குன்னம் காவல் நிலையத்துக்குள்பட்ட பகுதிகளில் தலா 3 சிலைகளும், பெரம்பலூர் காவல் நிலையத்துக்குள்பட்ட பகுதிகளில் 7 சிலைகளும் என, மொத்தம் 43 விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன.

இந்த சிலைகளுக்கு கடந்த 3 நாள்களாக சிறப்புப் பூஜைகள் செய்யப்பட்டன.

பின்னர், மாவட்டக் காவல் துறையினரின் அறிவுறுத்தலின் பேரில், பெரம்பலூர் மாவட்டத்தில் வைக்கப்பட்டிருந்த சிலைகள் அனைத்தும் சனிக்கிழமை காலை முதல் நகரின் பிரதான சாலைகள் வழியாக கொண்டு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டுகாவிரி ஆற்றில் கரைக்கப்பட்டது.

அரியலூர்: விநாயகர் சதுர்த்தியையொட்டி அரியலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த 55 விநாயகர் சிலைகளில் சனிக்கிழமை 44 சிலைகள் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு கரைக்கப்பட்டன.

விநாயகர் சதுர்த்தியையொட்டி அரியலூர், ஜயங்கொண்டம், ஆண்டிமடம், திருமானூர், தா. பழூர், செந்துறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 55 விநாயகர் சிலைகள் கடந்த வியாழக்கிழமை பிரதிஷ்டை செய்யப்பட்டு, தொடர்ந்து மூன்று நாள்களாக பூஜைகளும், வழிபாடுகளும் நடத்தப்பட்டன.

மூன்றாம் நாளான சனிக்கிழமை அரியலூர் காவல் உள்கோட்டத்தில் 23 சிலைகள், ஜயங்கொண்டம் காவல் உள்கோட்டத்தில் 21 சிலைகள் உள்பட மொத்தம் 44 விநாயகர் சிலைகள் கரைக்கப்பட்டன. இவற்றில் பொதுமக்கள் சார்பில் வைக்கப்பட்டிருந்த 27 விநாயகர் சிலைகள், பாரதிய ஜனதா கட்சி சார்பில் 4, இந்து முன்னணி சார்பில் 9, விசுவ ஹிந்து பரிஷத், தேமுதிக சார்பில் தலா 1, இந்து மக்கள் கட்சி சார்பில் 2 விநாயகர் சிலைகளும் அடங்கும்.

அரியலூர் உள்கோட்டத்தில் அரியலூர் சந்தைப்பேட்டை, பொன்னுசாமி அரண்மனைதெரு, பட்டுநூல்காரத் தெரு, செந்துறை, பொன்பரப்பி, மருதூர், கீழப்பழூர், வெற்றியூர், கல்லூர், மலத்தான்குளம், திருமானூர், திருமழப்பாடி, கண்டிராதித்தம், மேட்டுத் தெரு, அன்னிமங்கலம், செம்பியக்குடி, குலமாணிக்கம், வைத்தியாந்தபுரம், கோவில் எசனை, கரைவெட்டி, இலந்தைக்கூடம் உள்ளிட்ட 23 இடங்களில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் போலீஸ் பாதுகாப்புடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கரைக்கப்பட்டன.

அரியலூா் பகுதியைச் சோ்ந்தவா்கள் மருதையாற்றிலும், திருமானூா் பகுதியைச் சோ்ந்தவா்கள் கொள்ளிடத்திலும், ஜயங்கொண்டம் பகுதியைச் சோ்ந்தவா்கள் கொள்ளிடம் அணைக்கரைப் பகுதியிலும் விநாயகா் சிலைகளைக் கரைத்தனா்.

விநாயகா் சிலை ஊா்வலத்தின் போது பிரச்னைகள் வரலாம் என்று காவல் துறையால் கருதப்பட்ட இடங்களில் கூடுதலான போலீஸôா் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனா்.

அரியலூா் டி.எஸ்.பி. சந்திரசேகரன், ஜயங்கொண்டம் டி.எஸ்.பி. செல்லமுத்து தலைமையில், காவல் ஆய்வாளா்கள், 25 சிறப்பு உதவி ஆய்வாளா்கள், நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸôா் விநாயகா் சிலை ஊா்வல பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனா்.

**85 அடியை எட்டியது பவானிசாகா் அணை நீா்மட்டம்**

First Published : 05 Sep 2011 08:26:33 AM IST

சத்தியமங்கலம்,செப். 4: தொடா் மழை காரணமாக நீா்வரத்து அதிகரித்து வருவதால் பவானிசாகா் அணை நீா்மட்டம் 85.38 அடியாக உயா்ந்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருவதால், பவானிசாகா் அணை நீா்ப்பிடிப்புப் பகுதிகள் மற்றும் நீலகிரி கூடலூா் வனப்பகுதியில் தொடா்மழை பெய்து வருகிறது. இதனால் நீலகிரியில் உள்ள அவலாஞ்சி, கெத்தை மற்றும் பில்லூா் நீா்த்தேக்கங்கள் நிரம்பி வருகின்றன.

இதையடுத்து, பில்லூாில் இருந்து உபாிநீா் வெளியேற்றப்படுகிறது. மேலும் பவானி ஆறு மற்றும் மோயாறு பகுதியில் மழை பெய்து வருவதால் அணைக்கு நீா்வரத்து அதிகரித்துள்ளது.

வெள்ளிக்கிழமை 83 அடியாக இருந்த அணை நீா்மட்டம், ஞாயிற்றுக்கிழமை 85.38 அடியாக உயா்ந்துள்ளது. அணைக்கு முதலில் விநாடிக்கு 6 ஆயிரத்து 33 கன அடி நீா்வரத்து இருந்தது, பின்னா் படிப்படியாக அதிகரித்து அதிகபட்சமாக 15 ஆயிரத்து 805 கன அடி தண்ணீா் வரத்து இருந்தது.

அணையில் இருந்து ஆற்றுக்கு 400 கன அடியும், கால்வாய்க்கு 2300 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டுள்ளது.

**மேட்டூா் அணை நீா்மட்டம்: ஒரே நாளில் 3.30 அடி உயா்வு**

First Published : 05 Sep 2011 01:26:15 AM IST

மேட்டூா், செப். 4: மேட்டூா் அணையின் நீா் மட்டம் ஒரே நாளில் 3.30 அடி உயா்ந்துள்ளது.

கா்நாடக மாநிலத்தில் பெய்து வரும் கன மழையால், மேட்டூா் அணையின் நீா்வரத்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் அதிகரித்து வருகிறது. இதனால் அணை நீா்மட்டம் தொடா்ந்து அதிகரித்து வருகிறது.

சனிக்கிழமை இரவு விநாடிக்கு 55,061 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அப்போது அணையின் நீர்மட்டம் 83.15 அடியாக இருந்தது.

ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 3.30 அடி அதிகரித்து 86.45 அடியாக உயர்ந்திருந்தது. காவிரி டெல்டா பாசனத்துக்காக விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி வீதம் திறக்கப்பட்ட நீரின் அளவு ஞாயிற்றுக்கிழமை முதல் விநாடிக்கு 13 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், மேட்டூர் நீர்தேக்கப் பகுதியில் உள்ள பாலாறு, கோட்டையூர், பண்ணாவாடி, ஏமனூர், ஒட்டனூர், நாகமரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. இதனால், 2-வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் மீன் பிடி தொழில் பாதிக்கப்பட்டது.

**காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடரும் கன மழை**

First Published : 04 Sep 2011 01:08:12 AM IST



ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் அருவிப் பாறைகள் தெரியாத வகையில் கரை புரண்டோடும் வெள்ளம்.

குடகு, செப். 3: கர்நாடகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. இதனால் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

குடகு மாவட்டத்தில் காவிரிக் கரையோரத்தில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் ஜூன் 1-ம் தேதி தொடங்கிய தென்மேற்குப் பருவமழை இந்த ஆண்டு விட்டு விட்டுப் பெய்து வருகிறது. கோலார், தும்கூர், சாமராஜ் நகர், தாவணகெரே, கொப்பள், சித்ரதுர்கா, சிக்மகளூர், தாவணகெரே, ஷிமோகா, வட கன்னடம், ராய்ச்சூர், குல்பர்கா, உடுப்பி, குடகு உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த இரு மாதங்களாக குறிப்பிடத்தக்க அளவு மழை பதிவாகியுள்ளது.

கடந்த 3 நாள்களாக குடகு மாவட்டத்தில் உள்ள மடிக்கேரி, குடகு, சனி வாரச்சந்தை, சோமவார்பேட்டை, பாகமண்டலா ஆகிய நகரங்களில் கன மழை பெய்துவருகிறது. பாகமண்டலாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சாலைகளில் தண்ணீர் நிரம்பியுள்ளது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்துள்ளது. பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

காவிரியில் வெள்ளப்பெருக்கு: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளான தலைக்காவிரி மற்றும் பாகமண்டலாவில் பெய்யும் கனமழையால் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல பகுதிகள் தீவு போல் காட்சியளிக்கின்றன.

கரையோரங்களில், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஹாரங்கி, கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து பல மடங்கு அதிகரித்துள்ளது. கிருஷ்ணராஜசாகர் அணைக்கு சனிக்கிழமை மாலை நிலவரப்படி, விநாடிக்கு 34,514 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 36,708 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

அணையின் நீர்மட்டம் 124.10 அடியாக உயர்ந்து நிரம்பி வழிகிறது.

மகாராஷ்டிர மாநிலத்திலும் கனமழை பெய்து வருவதால் அங்கிருந்து கர்நாடக மாநிலத்திற்கு வரும் கிருஷ்ணா, நாராயணபுரா, துங்கபத்ரா, பீமா நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் ஆலமட்டி, துங்கபத்ரா அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ள மாவட்டங்களில் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு முதல்வர் சதானந்தகெப்டா உத்தரவிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் அடுத்த சில நாள்களுக்கு கன மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**தமிழகத்தில் இன்று மழைக்கு வாய்ப்பு**

First Published : 04 Sep 2011 01:06:41 AM IST

சென்னை, செப். 3: தமிழகம் மற்றும் புதுவையில் ஒரு சில இடங்களில் ஞாயிற்றுக்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் 2-ம் கட்டமாக தென்மேற்குப் பருவ மழை தீவிரமடைந்துள்ளது. கேரளம், கர்நாடகம் ஆகிய மாநில எல்லைகளை ஒட்டியுள்ள பகுதிகள் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி கோவை மாவட்டம் சின்னக் கல்லாறில் 180 மி. மீட்டர் மழை பெய்தது.

மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்):
நன்னிலம், தேவலா, பெரியாறு அணை 40, நடுவட்டம் 30, மேட்டூர் அணை, கூடலூர் பஜார், ஒரத்தநாடு, திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம், கும்பகோணம், கோபிச்செட்டிபாளையம், செங்கோட்டை, விராலிமலை, சிதம்பரம், புதுச்சேரி, காரைக்கால், அதிராமபட்டிணம் 20, பட்டுக்கோட்டை, உதகை, மயிலாடுதுறை, கோவை, திருச்சி, உத்தமபாளையம், கொடைக்கானல், மேட்டுப்பாளையம் 10.
வானிலை முன்னறிவிப்பு: தமிழகம், புதுவையில் அடுத்த 24 மணி நேரத்துக்கு வானம் ஓரளவுக்கு மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

**தினமலர்**

**விவசாயிகள் கடன் சுமை: தமிழகம் இரண்டாம் இடம்**

First Published : 05 Sep 2011 01:21:21 AM IST

புதுதில்லி, செப்.4 : நாட்டில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமான விவசாயிகள் கடன் சுமையால் அவதிப்படுவதாக அரசின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. தமிழகத்தில் 74.5 சதவிகித விவசாயிகள் கடன் பளுவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
விவசாயிகளின் கடன் பிரச்னை குறித்து மத்திய அரசின் என்.எஸ்.எஸ்.ஓ எனப்படும் தேசிய கணக்கெடுப்பு நிறுவனம் ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இத்தகவல்களை மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அவர் மேலும் கூறியது:
மொத்தமுள்ள 8.93 கோடி விவசாயிகளில், 4.34 கோடி விவசாய குடும்பங்களுக்கு (48.6 சதவிகிதத்தினர்) கடன் தொல்லை உள்ளது. இதில் ஆந்திர மாநிலம், 74.5 சதவிகிதத்துடன் (சுமார் 49.49 லட்சம் விவசாயிகள்) முதலிடத்திலும், தமிழ்நாடு 74.5 சதவிகிதத்துடன் 2ம் இடத்திலும் உள்ளன. மூன்று, நான்கு, ஐந்து, ஆறாவது இடங்களில் முறையே பஞ்சாப் மாநிலம் ( 65.4 சதவிகிதம்) கேரள மாநிலம் (64.4சதவிகிதம்), கர்நாடகா (61.6சதவிகிதம்) மகாராஷ்டிரா மாநிலம் ( 54.8 சதவிகிதம்) உள்ளன.
விவசாயிகளை கடன் தொல்லையிலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன், கடன் நிவாரண சட்டம்,2008ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. ரூ.65,318 கோடி அளவுக்கு பயிர் கடன் ரத்து, கடன் நிவாரணம் உள்ளிட்ட உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இதன் மூலம் சுமார் 3.69 கோடி விவசாயிகள் பயன் பெற்றனர். இதை ஈடு செய்யும் வகையில், முன்னணி நிதி நிறுவனங்கள், வங்கிகள், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.51,340 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளதாக சரத் பவார் தெரிவித்தார்.

**சில்லறை வணிகத்தில் அன்னிய முதலீடு**

செப்டம்பர் 05,2011,09:40

---



சென்னை:தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பல்வேறு வணிக அமைப்பு நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடந்தது. மாநிலத் தலைவர் விக்கிரமராஜா தலைமை வகித்தார்.கூட்டத்தில், மாநில தலைவர் விக்கிரமராஜா கூறியதாவது:வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, இணக்க வரி முறையில் உள்ள குளறுபடிகளை நீக்கியும், வாட் வரிவிதிப்பில் திருத்தம் செய்த, முதல்வருக்கு நன்றி. சில்லறை வணிகத்தில், அன்னிய முதலீட்டை அனுமதிப்பதால், கோடிக்கணக்கான சில்லறை வணிகர்கள் பாதிக்கப்படுவர். இது தொடர்பாக, அதிகாரிகள் குழு பரிந்துரையை, மத்திய அரசு ஏற்கக்கூடாது.இதை வலியுறுத்தி, வரும் 11ம் தேதி, மாவட்ட தலைநகரங்கள் தோறும் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். அடுத்ததாக, அக்., 15ம் தேதி கவர்னர் மாளிகை நோக்கி பேரணியும், மூன்றாம் கட்டமாக, பல்வேறு மாநில அமைப்புக்களுடன் சேர்ந்து, பார்லிமென்ட் நோக்கி பேரணி நடத்த முடிவு செய்துள்ளோம். இவ்வாறு விக்கிரமராஜா பேசினார் .

**12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண் வளர்ச்சிக்கு 4 சதவீத இலக்கு**

செப்டம்பர் 05,2011,03:57



மும்பை : வரும் 12வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண் துறை வளர்ச்சிக்கான இலக்கை, 4 சதவீதமாக நிர்ணயிக்க வேண்டும் என்று, மத்திய வேளாண் அமைச்சகம், மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

வரும் 2012-13ம் நிதியாண்டு முதல், 12வது ஐந்தாண்டு திட்டம் தொடங்க உள்ளது. இதையொட்டி, வேளாண்துறை வளர்ச்சிக்கான திட்டங்களை தயாரிக்கும் பணியில், மத்திய வேளாண் அமைச்சகம் ஈடுபட்டுள்ளது. நடப்பு 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007-08 முதல் 2011-12ம் நிதியாண்டு வரை), மொத்த உள்நாட்டு உற்பத்தி, 9 சதவீதமாகவும், இதில், வேளாண் துறையின் வளர்ச்சி, 4 சதவீதம் என்ற அளவிலும் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் 12வது ஐந்தாண்டு திட்ட காலத்திலும், இதே அளவிலான மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும் என, வேளாண் அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது, குறிப்பிட்ட காலத்திற்குள், விற்பனைக்கு தயாராகும் அனைத்து வகை உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளின் சந்தை மதிப்பு மற்றும் ஏற்றுமதியிலிருந்து, இறக்குமதி தொகையை கழித்து கிடைக்கும் தொகையாகும். 12வது ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கப்பட்டு வரும் நிலையில், வேளாண் துறை சார்ந்த செலவினங்கள் குறித்து, சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுடன் கலந்துரையாடி, ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென, வேளாண் அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்திய நுகர்வோர் நலன் அமைச்சகம், திட்டக்குழுவுடன் கலந்து பேசி, உணவு தானிய சேமிப்பு கிடங்குகளை சீரமைக்க, 330 கோடி ரூபாய் ஒதுக்கீடு பெற்றுள்ளது. இதனால், வேளாண் அமைச்சகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும், வேளாண் பொருட்களுக்கான சந்தைப் படுத்தும் திட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக, அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், விவசாயிகள் அல்லது கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கான அனைத்து செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, வேளாண் விளை பொருட்களை, சந்தைப் படுத்தும் திட்டங்களுக்காக, வேளாண் அமைச்சகம், தனிப்பட்ட முறையில், ஏராளமாக செலவழித்து வருகிறது. இத்தகைய செலவினங்களுக்கு திட்டமிடுதல் அவசியம். இதர அமைச்சகங்களுடன் கலந்து பேசி, திட்டங்களை செயல்படுத்தும் போது, ஒரே அமைச்சகத்தின் இரு பிரிவுகளிடையிலான வேறுபாடு குறையும் என, இத்துறையை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், நடப்பு 2011-12ம் நிதியாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.2 சதவீதமாக இருக்கும் என்று, மத்திய அரசு மதிப்பிட்டுள்ளது. இது, சென்ற 2010-11ம் நிதியாண்டில் 8.5 சதவீதமாக இருந்தது.

சென்ற 2010-11ம்நிதியாண்டில், வேளாண்துறை 6.6 சதவீத வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்தியாவில், பருவ மழை சரியாக பொழியும் பட்சத்தில், இந்த வளர்ச்சி, நடப்பு 2011 - 12ம் நிதியாண்டில், 3 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், போதிய பருவ மழை, பயிரிடும் பரப்பளவு அதிகரிப்பு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், இந்த மதிப்பீடு மாறும் எனலாம். வேளாண் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு இன்னும் இறுதி செய்யப்படாத நிலையில், வேளாண் துறை சார்ந்த ஆராய்ச்சி திட்டங்களுக்கு, அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என, இத்துறையினர் தெரிவித்தனர்.

11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில், மத்திய, மாநில அரசுகள், வேளாண் ஆராய்ச்சி சார்ந்த பொது செலவினத்தை 0.7 சதவீதத்தில் இருந்து 0.9 சதவீதமாக உயர்த்தின. தற்போது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில், வேளாண் ஆராய்ச்சிக்கான செலவு, ஒரு சதவீதம் என்ற அளவிற்கே உள்ளது. மேலும், இந்த ஆராய்ச்சியில், வேளாண் மற்றும் பருவ நிலை சார்ந்த பயிர் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

மழை பொழிவு குறைவாக உள்ள வறண்ட பகுதிகளில், பூச்சி தாக்குதலை சமாளிக்கக் கூடிய பயிர் வகைகளை உருவாக்குவதன் மூலம், உணவு தானிய உற்பத்தியை பெருக்கலாம். உணவு தானியங்கள் வீணாவதை தடுத்தல், விவசாயிகளுக்கு தேவையான கடன் வசதி மற்றும் உணவு பதப்படுத்தல் துறையின் வளர்ச்சி, ஆகிய நான்கு அம்சங்களை மேம்படுத்துவதன் மூலம், நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதையொட்டி, ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், 2010 - 11ம் நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட, 6,755 கோடி ரூபாய், நடப்பு 2011 - 12ம் நிதியாண்டில் 8,860 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கி, நடப்பு 2011-12ம் நிதியாண்டிற்கான, மொத்த உள்நாட்டு

உற்பத்தி இலக்கை, 8.2 சதவீதத்தில் இருந்து, 7.9 சதவீதமாக குறைத்துள்ளது. அதே சமயம், வேளாண் உற்பத்தி வளர்ச்சி, மறுமதிப்பீடு செய்யப்பட்டு 3.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. எனினும் தொழில் மற்றும் சேவைகள் துறையின் வளர்ச்சி 4 மற்றும் 9 சதவீதமாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.

**வரும் 2011-12ம் பருவத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 50 லட்சம் டன்னாக உயரும்**

செப்டம்பர் 05,2011,03:55



புதுடில்லி : வரும் சோயா பருவத்தில், (அக்டோபர் - செப்டம்பர்), நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றமதி, 50 லட்சம் டன்னாக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. சோயா உற்பத்தி அதிகரிப்பு மற்றும் சர்வதேச அளவில் இதற்கான தேவை உயர்வு போன்றவற்றால், இதன் ஏற்றுமதி கடந்த பருவத்தை விட, வரும் 2011-12ம் பருவத்தில், 2 லட்சம் டன் அதிகரித்து, 50 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த பருவத்தில்,சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 48 லட்சம் டன் என்ற அளவில் இருந்தது என, இந்திய சோயா பதப்படுத்துவோர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர், ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.

சர்வதேச அளவில், இந்திய சோயா புண்ணாக்கிற்கு அதிக வரவேற்பு உள்ளது. மற்ற நாடுகளின் போட்டியை எதிர்கொள்ளும் வகையில், இதன் விலையும் உள்ளது. இந்நிலையில், வரும் பருவத்தில், சோயா எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சோயா புண்ணாக்கு ஏற்றுமதி இலக்கை, சுலபமாக எட்ட முடியும் என, அகர்வால் நம்பிக்கை தெரிவித்தார்.

சோயா உற்பத்தி, 11 சதவீதம் அதிகரித்துள்ளது. பல மாநிலங்களில், சாதகமான பருவ நிலை நிலவுகிறது. இதனால், இதன் உற்பத்தி எதிர்பார்த்த அளவிற்கு இருக்கும். சோயாவிலிருந்து, உற்பத்தி செய்யப்படும் எண்ணெய், சமையலுக்கும், மாற்று எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

இதிலிருந்து கிடைக்கும், புண்ணாக்கு, கோழி மற்றும் கால்நடை தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. நாட்டின் மொத்த சோயா புண்ணாக்கு உற்பத்தியில், 70 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நம் நாட்டிற்கு, பிரேசில் மற்றும் அர்ஜென்டினா ஆகியவை போட்டி ஏற்றுமதி நாடுகளாக உள்ளன. நம் நாட்டிலிருந்து, ஜப்பான், வியட்நாம், தென்கொரியா,சீனா போன்ற நாடுகளுக்கு, சோயா புண்ணாக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரியில் தூத்துக்குடி விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2011,00:24 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி வட்டார விவசாயிகளுக்கு கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரியில் வேளாண்மை இயந்திரமயமாக்கல் என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அட்மா திட்டத்தின் கீழ் கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வைத்து தூத்துக்குடி வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரமயமாக்கல் என்பது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை கிள்ளிக்குளம் வேளாண்மை கல்லூரி முதல்வர் கணேசன் தொடங்கி வைத்தார். அத்திமரப்பட்டி விவசாயிகள் ஆர்வலர் குழு தலைவர் இளங்கோவன் முன்னிலை வகித்தார். வேளாண்மை பொறியியல் பிரிவு உதவி செயற் பொறியாளர் அமுதன் வரவேற்றார். இரண்டு நாட்கள் நடந்த பயிற்சியில் நவீன வேளாண் இயந்திரங்கள், வேளாண்மை பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள், திருந்திய நெல் சாகுபடி, இயந்திர நடவு முறை, பண்ணை கருவிகள் செயல் விளக்கம், வாழை சாகுபடியில் உயர் தொழில் நுட்பங்கள், நுண்நீர் பாசன முறைகள், உழுவை இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாடுகள் குறித்து பல்வேறு பேராசிரியர்கள், துறை பொறியாளர்கள் மற்றும் தனியார் நிறுவன அதிகாரிகள் விளக்கி கூறினர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி பொறியாளர்கள் முருகன், திவ்வியநாதன் மற்றும் கருப்பசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

**மஞ்சள் விற்பனை மையம் துவக்க உழவர் பேரியக்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2011,01:31 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் மஞ்சள் விற்பனைக்கு மையம் துவங்கிட வேண்டும்' என மாவட்ட உழவர் பேரியக்க செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.தர்மபுரியில் மாவட்ட உழவர் பேரியக்க செயற்குழு கூட்டம் மாநில துணை பொது செயலாளர் தசரதன் தலைமையில் நடந்தது. மாவட்ட செயலாளர்கள் சின்னசாமி (கிழக்கு) முருகேசன் (மேற்கு), பெரியண்ணன் (கி), ரத்தினம் (மே) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மாநில இணை பொது செயலாளர் சரவணன்,

தமிழக மாணவர் சங்க தலைவர் பாரிமோகன், பா.ம.க., மாவட்ட செயலாளர்கள் சாந்தமூர்த்தி, அரசாங்கம், மாவட்ட தலைவர்கள் வணங்காமுடி, சுப்பிரமணி ஆகியோர் பேசினர்.

"தர்மபுரி மாவட்டத்தில் அதிக அளவில் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்தாண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் 17 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையில் விற்பனையானது. தற்போது, 4 ரூபாய் முதல் 7 ஆயிரம் ரூபாய் வரையில் விலை போகிறது.தமிழக அரசு மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்திட வேண்டும். தர்மபுரி மாவட்டத்தில் மஞ்சள் விற்பனை மையம் துவங்கிட வேண்டும். உரத்தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. வியாபாரிகள் உரங்களை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை விவசாய பணிகளுக்கு பயன்படுத்த வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.உழவர் பேரியக்க ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், முத்துகுமார், கோபால், முருகேசன், பொன்மாது, பெரியண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மரவள்ளி செடிகளில் மாவுப்பூச்சி தாக்குதல் : மகசூல் குறையும் அபாயம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 05,2011,01:47 IST

ஆத்தூர் : ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியில் பயிர் செய்துள்ள மரவள்ளி கிழங்கு செடிகளில், மாவுப்பூச்சி தாக்கம் அதிகரித்துள்ளது. அதனால், மரவள்ளி கிழங்கு உற்பத்தி, அதன் விலை குறையும் சூழல் உருவாகியுள்ளது. தமிழகத்தில், சேலம், விழுப்புரம், கடலூர், நாமக்கல், பெரம்பலூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில், மொத்தம், 1.8 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. சேலம், நாமக்கல் மாவட்டத்தில், 420க்கும் மேற்பட்ட மரவள்ளி கிழங்கு அரவை செய்யும் சேகோ ஃபேக்டரிகள் உள்ளன. கடந்த, 2010ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜவ்வரிசி மூட்டை (90 கிலோ) 5,242 ரூபாய், ஸ்டார்ச், 3,160 ரூபாய் என விலை உயர்ந்தது. மரவள்ளி கிழங்கு மூட்டை, 700 ரூபாய் வரை விலை இருந்தது. அதனால், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, கருமந்துறை, தம்மம்பட்டி, வாழப்பாடி சுற்றுவட்டார பகுதிகளில், பருவ காலத்தில் ஏராளமான விவசாயிகள் பர்மா, குங்கும ரோஸ், ரோஸ், கள்ளி பர்மா போன்ற பல்வேறு வகையான மரவள்ளி பயிர் சாகுபடி துவங்கினர். போதிய அளவில் பருவ மழை இல்லாததால், கிணற்று பாசனத்தில், சொட்டு நீர் பாசன முறையில் பயிர் பராமரிப்பு பணி மேற்கொண்டனர். நான்கு மாதங்களில் அறுவடை துவங்கும் நேரத்தில், மரவள்ளி செடிகளில் மாவுப்பூச்சி, சார் உறிஞ்சும் பூச்சிகள் தாக்கம் காரணமாக இலைகள் உதிர்ந்து, கிழங்கு உற்பத்தி பாதித்துள்ளது. தற்போது, ஜவ்வரிசி மூட்டை, 3,000 ரூபாயும், ஸ்டார்ச், 2,000 ரூபாய் என, விலை

குறைந்ததால், மரவள்ளி கிழங்கின் விலை சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால், மரவள்ளி கிழங்கு அறுவடை பணிகள் மேற்கொண்டு வரும், கல்வராயன்மலை, பச்சமலைகளில் வசிக்கும் மலைவாழ் கிராம விவசாயிகள் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து ஆத்தூர் பகுதியை சேர்ந்த மரவள்ளி கிழங்கு விவசாயிகள் கூறியதாவது: கடந்த ஆண்டு மரவள்ளி கிழங்கு மூட்டை, 500 முதல், 700 ரூபாய் வரை விற்றதால், பரவலாக கிணற்று பாசனத்தில் மரவள்ளி பயிர் செய்தோம். அறுவடை காலத்தில் மாவுப்பூச்சி தாக்கம் காரணமாக இலைகள் உதிர்வதோடு, உற்பத்தியும் பாதித்துள்ளது. நோய் தாக்கத்தினால், செடிகளில் வேர்கள் இல்லாமல் வெறுமனே காணப்படுகிறது. ஏக்கருக்கு, 200 மூட்டை கிழங்கு விளைச்சலுக்கு, 50 மூட்டைகள் உற்பத்தியும், மாவு சத்து இல்லாமல் உள்ளது. அறுவடை செய்யும் கிழங்குளில் "பாய்ன்ட்' (மாவுச்சத்து) இல்லையென, 300 முதல், 400 ரூபாய் வரை மட்டுமே சேகோ ஃபேக்டரிகளில் விலை கொடுக்கின்றனர். மரவள்ளி விளைச்சல் மற்றும் விலை இல்லாததால், விவசாயிகள் தலைதூக்க முடியாத நிலை ஏற்படுகிறது. மாவு பூச்சிகளை கட்டுப்படுத்தவும், மரவள்ளி கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்யவும், மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மழை மற்றும் நோய் பாதிப்புகளில் நஷ்டம் ஏற்படும் விவசாயிகளுக்கு, அரசு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு கூறினர்.

**விலைவாசியைக் குறைக்க அரசு முயற்சி: பிரணாப்**

First Published : 04 Sep 2011 12:00:00 AM IST



கொல்கத்தா, செப். 3: விலைவாசியைக் குறைப்பதற்காக, நாட்டில் வேளாண் உற்பத்தியைப் பெருக்க அரசு முயற்சித்து வருகிறது என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

தில்லியில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர், இது குறித்து கூறியது: உணவுப் பொருள் பணவீக்க விகிதம் இரட்டை இலக்கத்தை (10.05) எட்டியுள்ளது கவலையளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் பணவீக்கம் அதிகரிப்பது வழக்கம்தான். ஆனால் ஒரு சில உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

ஒட்டுமொத்த பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய ரிசர்வ் வங்கி பணக் கொள்கையில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பலனளித்து வருகின்றன. வரும் வாரங்களில் மேலும் சில புதிய யுத்திகள் கையாளப்படும் என்றார் முகர்ஜி.

ரிசர்வ் வங்கி வரும் செப்டம்பர் 16-ல் தனது பணக்கொள்கையை மறு ஆய்வு செய்யவுள்ளது. இதில் மீண்டும் வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்படும் என்றே தெரிகிறது.
கடந்த 5 மாதங்களில் இல்லாத அளவு கடந்த ஆகஸ்ட் 20-ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் உணவுப் பணவீக்க விகிதம் 10.05 சதவீதமாக உயர்ந்தது. உணவுப் பொருள்களின் விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. வெங்காயம், பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை அதிகரித்ததே உணவுப் பணவீக்கம் இரட்டை இலக்கத்தை எட்ட முக்கியக் காரணம்.

**சின்ன வெங்காயம் அறுவடை வரத்து அதிகம்; விலை குறைவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,00:45 IST

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில், சின்ன வெங்காயம் அறுவடை பணி துவங்கியுள்ளதால், விலை குறைந்துள்ளது.
ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி உள்ளிட்ட பகுதிகளில், மஞ்சள், கருணை கிழங்கு, மரவள்ளி மற்றும் காய்கறி செடிகள் போன்ற பயிர்களில் ஊடு பயிராக சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் சின்ன வெங்காயம் உற்பத்தி குறைந்ததால், கிலோ, 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. கடந்த வாரத்தில், சின்ன வெங்காயம் குறைந்தளவில் மார்கெட்டுகளுக்கு வரத்து இருந்ததால், கிலோ, 20 முதல், 25 ரூபாய் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, ஆத்தூர், தலைவாசல், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் போன்ற பகுதிகளில், சின்ன வெங்காயம் அறுவடை செய்யும் பணிகள் ஜரூராக நடந்து வருகிறது. அதனால், தலைவாசல் தினசரி காய்கறி மார்க்கெட்டுக்கு சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. சின்ன வெங்காயம் கிலோ, 12 முதல், 14 ரூபாய் வரை விற்பனையாகிறது. அதில், விதை வெங்காயம் கிலோவுக்கு, 30 முதல், 40 ரூபாய் விற்பனை செய்து வருகின்றனர். சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால், விலை குறைந்துள்ளது.

**ஐசோபாம் மக்காச்சோள திட்டத்தில் 50 விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,00:34 IST

நாமக்கல்: நாமக்கல் வட்டாரத்தில், வேளாண் துறை சார்பில், ஐசோபாம் மக்காச்சோளம் பெருக்கத்திட்டத்தின் கீழ், யூனியன் கூட்ட அரங்கில், இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது.

பயிற்சியில், மக்காச்சோளம் சாகுபடி குறித்த நவீன தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மண் ஆய்வின் முக்கியத்துவம், தரமான சான்று பெற்ற வீரிய ஒட்டு ரகங்கள், உரம், பூச்சி நோய் நிர்வாகம மற்றும் பாசன பராமரிப்பு முறைகள், சொட்டு நீர் பாசனத்தால் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கப்பட்டது. இப்பயிற்சியில், வேளாண் இணை இயக்குனர் குணசேகரன், விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், நாமக்கல் வட்டார வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) செல்வி, வேளாண் அலுவலர்கள் விஜயா ஆகியோர் பங்கேற்று பேசினர். நிகழ்ச்சியில், தேர்ந்தெடுக்கப்பட்ட, 50 விவசாயிகள் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை, உதவி விதை அலுவலர் சேகர், உதவி வேளாண் அலுவலர்கள் ராதாகிருஷ்ணன், செந்தில்குமார், வேணு, நயினார் ஆகியோர் செய்திருந்தனர்.

**விதை கரும்பு வழங்க வேண்டும்: மதுராந்தகம் ஒன்றிய பா.ம.க., கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,21:36 IST

மதுராந்தகம் : அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடம் நெல் வாங்க மறுக்கும் அதிகாரிகள் மீது, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பா.ம.க., கோரிக்கை விடுத்துள்ளது. மதுராந்தகம் ஒன்றிய பா.ம.க., நிர்வாகிகள் கூட்டம், மதுராந்தகத்தில் நடந்தது. ஒன்றிய செயலர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

மாநில துணைப் பொதுச்செயலர் கங்காதரன், மாவட்டச் செயலர் குமரவேல், மாவட்ட தலைவர் கோபாலகண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில், புதிய தலைமைச் செயலகத்தை, சிறப்பு மருத்துவமனையாக மாற்ற உத்தரவிட்ட, முதல்வர் ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, நிரந்தரத் தொழிலாளர் நியமிக்க வேண்டும்; விவசாயிகளுக்கு விதைக் கரும்புகள் வழங்க வேண்டும்; தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களில், விவசாயத்திற்குத் தேவையான உரங்களை இருப்பு வைத்து, விவசாயிகளுக்கு உடனே வழங்க வேண்டும்; அரசு நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகளிடம் நெல் வாங்க மறுக்கும் அதிகாரிகள் மீது, நடவடிக்கை எடுக்க வேண்டும்; நெல் கொள்முதல் நிலையங்களில், விவசாயிகள் கொண்டுவரும் நெல்லை வாங்க, கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உட்பட, பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பார்த்தீனியம் களைச் செடிகளை அழிக்க விழிப்புணர்வு முகாம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,21:38 IST

திருவள்ளூர் : ஆர்.கே.பேட்டை அடுத்த, எஸ்.வி.ஜி.புரம் கிராமத்தில், பார்த்தீனியம் களைச் செடிகளை அழிக்கும் விழிப்புணர்வு முகாம் நேற்று நடந்தது. திருவள்ளூர் வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசலு தலைமை வகித்தார். முகாமிற்கு, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை நடவு வல்லுனர் ஜெயச்சந்திரன் முன்னிலை வகித்து, பார்த்தீனியம் செடிகளால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் தீங்குகள் மற்றும் இந்த விஷ செடிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் முறை ஆகியவை குறித்தும் விளக்கி பேசினார். வேளாண்மை விரிவாக்க அலுவலர் சமுத்திரம், உதவி செயற்பொறியாளர் மன்னி வெங்கடேஸ்வரலு, வேளாண்மை அணி உறுப்பினர் பி.பி.மலர், சமூகவியல் அணி உறுப்பினர் கதிரவன் ஆகியோர் அடங்கிய தொழில்நுட்ப குழுவினர், பார்த்தீனியம் களைகளை கட்டுப்படுத்தும் முறைகளை செய்து காண்பித்தனர். சாதாரண சமையல் உப்பு 200 கிராமுடன், 2 மில்லி டீப்பாலை, ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளித்து பார்த்தீனியம் களைகளை கட்டுப்படுத்தலாம் என வலியுறுத்தினர். இம்முகாமில் எஸ்.வி.ஜி.புரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து, திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## நெல் கொள்முதல் நிலையத்தில் உள்ளூர் வியாபாரிகள்... ஆதிக்கம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,23:07 IST

கடலூர் : விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் உள்ளூர் வியாபாரிகள் "சிண்டிகேட்' அமைத்து செயல்படுவதால், விவசாயிகள் கொண்டு வரும் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர். விருத்தாசலத்தில் தாலுகா அலுவலகம் அருகே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது. இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு மங்கலம்பேட்டை, கம்மாபுரம், வேப்பூர், ஸ்ரீமுஷ்ணம், பெண்ணாடம் என சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல், உளுந்து, மக்காச்சோளம் உள்ளிட்ட விளை பொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். தினசரி 5,000 நெல் மூட்டைகள் உட்பட பல்வேறு தானியங்களாக 10 ஆயிரம் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. விவசாயிகள் கொண்டு வரும் நெல் உள்ளிட்ட தானிய மூட்டைகளை "லாட்' பிரித்து வைக்கப்படும். அதனை வியாபாரிகள் தரம் பார்த்து விலை நிர்ணயம் செய்வார்கள். கூடுதல் விலை கேட்கும் வியாபாரிகளிடம் விவசாயிகள் விற்பனை

செய்வதும், அதற்கான பணத்தை அன்று மாலைக்குள் வழங்கப்படும். இங்கு நெல் உள்ளிட்ட தானிய மூட்டைகள் அதிக அளவில் விற்பனைக்கு வருவதால் அதனை கொள்முதல் செய்வதற்காக பிற மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் அதிக அளவில் வரத் துவங்கினர். இதனால், விவசாயிகளுக்கு அவர்கள் கொண்டுவரும் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து வந்தது. வெளி மாவட்ட வியாபாரிகள் வருகையால் பாதிக்கப்பட்ட உள்ளூர் வியாபாரிகள், ஒழுங்குமுறை விற்பனைக் கூட ஊழியர்கள் சிலரின் ஆதரவுடன் வெளியூர் வியாபாரிகளை ஏலத்தில் பங்கேற்காத வகையில் தடை ஏற்படுத்தினர்.

உள்ளூர் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து, விவசாயிகள் கொண்டு வரும் விளை பொருட்களை மிகக் குறைந்த அளவிற்கு விலை நிர்ணயம் செய்து வாங்குகின்றனர். அதற்கான தொகையையும் உடனடியாக வழங்குவதில்லை. விவசாயிகளிடம் வாங்கிய விளை பொருட்களை, வெளியூர் வியாபாரிகளிடம் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து, அவர்களிடம் பணத்தை வாங்கி இரவு நேரத்தில் விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். இதனால் வெகு தொலைவிலிருந்து வரும் விவசாயிகள், பணத்தை வீட்டிற்கு கொண்டு செல்வதில் பெரும் சிக்கல் நிலவி வருகிறது. இதுகுறித்து விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் தொடர்ந்து முறையிட்டு வந்த போதிலும், உள்ளூர் வியாபாரிகளின் ஆதிக்கம் குறைந்தபாடில்லை. மாறாக, அவர்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதன் உச்சகட்டமாக, கடந்த வாரம் அதிசய பொன்னி ரக நெல் மூட்டை (75 கிலோ) 420 ரூபாய் என உள்ளூர் வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்து விவசாயிகளிடம் கொள்முதல் செய்துள்ளனர். ஆனால், இதே ரக நெல் பிற பகுதிகளில் மூட்டை 750 ரூபாயிலிருந்து 900ம் வரை விலை போகிறது. உரிய விலை கிடைக்கும் என வெகு தொலைவிலிருந்து நெல் மூட்டைகளை கொண்டு வந்த விவசாயிகள், அதனை திருப்பி எடுத்துச் சென்று பாதுகாக்க முடியாத காரணத்தினால் அடிமாட்டு விலைக்கு வேதனையோடு விற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதே நிலை நீடித்தால், விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விவசாயிகளின் வருகை குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு முன்பாக, உள்ளூர் வியாபாரிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்திடவும், வெளியூர் வியாபாரிகள் நேரடியாக ஏலத்தில் பங்கேற்க மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே விருத்தாசலம் பகுதி விவசாயிகளின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக உள்ளது.

**நெல் கொள்முதல் செய்யாததால் புவனகிரி விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,23:44 IST

புவனகிரி : புவனகிரி, கீரப்பாளையம் வட்டார பகுதியில் குறுவை நெல் அறுவடை செய்யப்பட்டும் கொள்முதல் செய்யப்படாததால் விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர். புவனகிரி வட்டார பகுதிக்குட்பட்ட வண்டுராயன்பட்டு, அழிச்சிக்குடி, நாலாந்தெத்து, பு.உடையூர், மஞ்சக்கொல்லை, சீயப்பாடி, சேத்தியாத்தோப்பு உள்ளிட்ட பகுதியிலும்,கீரப்பாளையம் பகுதியில் வடஹரிராஜபுரம், தென்ஹரிராஜபுரம், சாக்காங்குடி, ஆயிப்பேட்டை, ஒரத்தூர், சாத்தமங்கலம் உள்ளிட்ட பகுதியிலும் குறுவை சாகுபடியாக ஏ.எஸ்.டி., 16 ரக நெல் சாகுபடி செய்யப்பட்டு அந்தந்த பகுதியில் உள்ள களத்து மேட்டிலும், விவசாயிகளின் வீடுகளிலிலும் மூட்டைகளாக அடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் அரசு மூலம் மேற்கண்ட பகுதியில் நெல் கொள்முதல் திறக்கப்படாததாலும், வியாபாரிகளும் கொள்முதல் செய்யவில்லை. இதனால் அப்பகுதி விவசாயிகள் தாங்கள் பெரும்பாடுபட்டு விளைச்சல் செய்து அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய முடியவில்லை என அதிருப்தியில் உள்ளனர்.

**வேளாண்மை அலுவலர் சங்க மாநில பொதுக்குழுக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,23:12 IST

கடலூர் : தமிழ்நாடு உதவி வேளாண்மை அலுவலர் சங்க மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் வேளாண் காவலன் பத்திரிகை ஆசிரியர் சண்முகத்திற்கு பணி ஓய்வு பாராட்டு விழா கடலூரில் நடந்தது. மாவட்டத் தலைவர் குமார் வரவேற்றார். மாநிலத் துணைத் தலைவர் பிச்சைமணி, தணிக்கையாளர் காத்தையன் முன்னிலை வகித்தனர். இணைச் செயலர் துரை அருளானந்தம், மகளிர் அணிச் செயலர் சர்மிளா சிறப்புரையாற்றினார். பொதுச் செயலர் கண்ணுசாமி அறிக்கை வாசித்தார். கூட்டத்தில் சிறு, குறு விவசாயிகளின் உற்பத்தியை பெருக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக மண் ஆய்வு கட்டணத்தை ஆத்மா திட்டத்தின் கீழ் அரசே இலவசமாக செய்து தர வேண்டும். உதவி அலுவலர்களுக்கு கிடங்கு பணி அளிப்பதை ரத்து செய்ய வேண்டும். வேளாண் துறையில் தகுதியற்ற நிலையில் உள்ள குடியிருப்புகளுக்கு ஊதியத்தில் இருந்து வாடகை பிடித்தம் செய்வதை நிறுத்த வேண்டும். துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி விதை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆகியோருக்கு கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருந்திய நெல் சாகுபடிமுனைப்பு இயக்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,02:03 IST

குறிஞ்சிப்பாடி:குறிஞ்சிப்பாடி அடுத்த குருவப்பன்பேட்டை கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முனைப்பு இயக்க கூட்டம் நடந்தது.குறிஞ்சிப்பாடி வட்டார வேளாண்மை துறை சார்பில் குருவப்பன் பேட்டை, டி.பாளையம் கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி முனைப்பு இயக்கம் கூட்டம் நடந்தது. சம்பா பருவத்தில் நூறு சதவீதம் திருந்திய நெல் சாகுபடி முறையினைக் கடைபிடிக்க வேளாண்மை துறை மூலம் அனைத்து கிராமங்களிலும் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. கூட்டத்திற்கு குறிஞ்சிப்பாடி உதவி இயக்குனர் அப்பன்ராஜ் தலைமை தாங்கினார். துணை வேளாண் அலுவலர் திருஞானம், வேளாண்மை அலுவலர்கள் பரஞ்ஜோதி, சின்னதுரை, தனசேகர் ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

**செம்மை கரும்பு சாகுபடிசெயல் முறை விளக்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,02:21 IST

சங்கராபுரம்:சங்கராபுரம் அடுத்த மூரார்பாளையத்தில் செம்மை கரும்பு சாகுபடி குறித்த செயல் முறை விளக்க கூட்டம் மற்றும் ஆலை களப்பணியாளர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது.கச்சிராபாளையம் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை சார்பில் நடந்த கூட்டத்திற்கு தனி அலுவலர் சிவமலர் தலைமை தாங்கினார். கரும்பு அபிவிருத்தி அலுவலர் வில்லியம் ஆண்டனி வரவேற்றார்.

மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜேந் திரன், திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் அன்புமணி, சின்ன சேலம் வேளாண் உதவி இயக்குனர் செல்வராஜ், சங்கராபுரம் வேளாண் உதவி இயக் குனர் ஆனந்தன், வேளாண்மை அலுவலர் சரவணன் பேசினர். கரும்பு அலுவலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

பின்னர் ஆலை களப்பணியாளர்களுக்கான பயிற்சி முகாம் சின்னசேலம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தலைமையில் நடந்தது. கரும்பு உதவியாளர்கள், கரும்பு அபிவிருத்தி உதவியாளர்கள், கரும்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர். செம்மை கரும்பு சாகுபடி குறித்து பேராசிரியர் அன்புமணி பயிற்சியளித்தார்.

**பால் உற்பத்தி பெருக்க 221 மெட்ரிக் டன் தீவனம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,00:27 IST

ஈரோடு: ""பால் உற்பத்தி அதிகரிக்க, கால்நடை கலப்பு தீவனம் தட்டுப்பாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என, கலெக்டர் காமராஜ் தெரிவித்தார். ஈரோடு மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் சார்பில், பால் கொள்முதலை அதிகரிக்க, சங்க தனி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டம் ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் காமராஜ் தலைமையில் நடந்தது. சங்க கொள்முதல் குறியீட்டை எய்தாத செயலாளர்களிடம் கலெக்டர் தனித்தனியே ஆய்வு செய்தார். பல சங்க செயலாளர்கள், தங்கள் பகுதியிலுள்ள கறவை மாடுகள் சினையாக இருப்பதாகவும், 15 நாளில் கன்று ஈன்று, பால் உற்பத்தி அதிகரிக்கும் என உறுதியளித்தனர்.

சில சங்க செயலாளர்கள், "பால் உற்பத்தியாளர்களுக்கு தொடர்ந்து கால்நடை தீவனம் வழங்க வேண்டும்' என்று கேட்டனர். கலெக்டர், ""ஆவின் நிர்வாகத்தின் மூலம் ஏற்கனவே 68 மெட்ரிக் டன் கால்நடை கலப்பு தீவனம் விநியோகிக்கப்பட்டுள்ளது. மேலும், 221 மெட்ரிக் டன் கலப்பு தீவனம் விநியோகிக்கப்பட உள்ளது. பால் உற்பத்தியாளர்களின் தேவைக்கேற்ப மேலும் கலப்பு தீவனம் வழங்கப்படும். மாவட்ட நிர்வாகம் சார்பில், நபார்டு திட்டத்தின் மூலம் மானியத்துடன் கறவை மாடு வாங்க கடன் வழங்கப்படுகிறது. பால் உற்பத்தியாளர்கள், ஆவின் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயனடையலாம்," என்றார்.

**216 இடங்களில் கால்நடை முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,00:27 IST

Xஈரோடு: ""மாவட்டத்தில் இந்தாண்டு 216 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்கள் நடத்த, அரசு 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது," என, அமைச்சர் ராமலிங்கம் பேசினார். சென்னிமலை யூனியன், கவுண்டச்சிபாளையம் பஞ்சாயத்து வள்ளிபுரத்தான் பாளையத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் துவக்க விழா நடந்தது. பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் பேசியதாவது: ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டு 216 கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அரசு 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதிக பால் தரக்கூடிய தீவனமான மினி கிட், புல் கரணை, மக்காசோளம் ஆகியவை முகாமில் வழங்கப்படும். விவசாயிகள் அரசின் சார்பில் நடத்தப்படும் இந்த முகாமில் பங்கேற்று பயனடைய வேண்டும்.

ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காக முதல்வர் ஜெயலலிதா மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளார்.இவ்வாறு அமைச்சர் பேசினார். முகாமில், 350 வெள்ளாடு, 250 செம்மறியாடு, 205 பசுமாடு, 150 எருமை மாடுகள் அழைத்து வரப்பட்டிருந்தன. கால்நடைகளுக்கு, குடற்புழு நீக்கம், தடுப்பூசி, மலடு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், நோய் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கப்பட்டது. கலெக்டர் காமராஜ், கால்நடைத் துறை இணை இயக்குனர் கோபால், பஞ்சாயத்து தலைவர் பாலமணி, டவுன் பஞ்சாயத்து தலைவர் வரதராஜன், யூனியன் கவுன்சிலர் கோபாலகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**"வேளாண் தொழிற்நுட்பத்தால் மகசூல் அதிகரிக்கும்' "ஆத்மா' திட்ட விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,01:12 IST

பொள்ளாச்சி : "வேளாண்மை தொழிற்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினால், மகசூலை அதிகரிக்க செய்யலாம்' என, தெரிவிக்கப்பட்டது. பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண் துறை சார்பில், வேளாண் தொழிற்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. திட்ட தலைவர் சக்திவேல் தலைமை வகித்தார். வடக்கு ஒன்றிய வேளாண் அலுவலர் விஸ்வநாதன், பட்டு வளர்ச்சி துறை ஆய்வாளர் அன்வர், தோட்டக்கலைத்துறை துணை வேளாண்மை அலுவலர் ராமலிங்கம், வேளாண் விற்பனை பிரிவு உதவி வேளாண் அலுவலர் நரசிம்மமூர்த்தி, கால்நடைத்துறை மருத்துவர் ராம்நாத் முன்னிலை வகித்தனர்.

அதிகாரிகள் பேசியதாவது: "ஆத்மா' திட்டத்துக்கு, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில், 2.14 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியை கொண்டு 50 இடங்களில் தென்னை செயல்விளக்க திடல்கள் அமைத்து, கண்டாமிருக வண்டு, சிவப்பு கூண் வண்டுகளை கட்டுப்படுத்தும் தொழிற்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். தென்னை விவசாயிகளை, கேரளா மாநிலம் காசர்கோடு பகுதியில் உள்ள மத்திய ஊடுபயிர் சாகுபடி பயிற்சி மையத்துக்கு அழைத்து சென்று, தென்னையில் குறுமிளகு, கோகோ, சாதிக்காய் உட்பட பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்ய பயிற்சி அளித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடைத்துறை சார்பில் கொடைக்கானலில் உள்ள மத்திய கால்நடை ஆய்வு மையத்துக்கு அழைத்து சென்று பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. பட்டு வளர்ச்சித்துறை சார்பில், செயல்விளக்க திடல்கள் அமைத்து 50 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படும். வேளாண்மை தொழிற்நுட்பங்கள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினால், மகசூலை அதிகரிக்க செய்யலாம். இந்நிலையில், விவசாய விளைப் பொருட்களுக்கு கட்டுபடியான விலை கிடைக்க, மார்க்கெட்டிங் வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு, அதிகாரிகள் பேசினர். விவசாயிகள் ஆர்வலர் குழுவினர், ஆத்மா திட்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

**ஆரஞ்சு விலை உயர்வுவிவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,21:44 IST

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் கோடை ஆரஞ்சு சீசன் களைகட்டியுள்ளது. விளைச்சல் குறைவாக இருந்தபோதும், விலை அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வழக்கமாக ஜூன் முதல் வாரத்தில் துவங்கும் கோடை ஆப் சீசன் ஒருங்கிணைந்த பூக்களின்றி ஜூலை மற்றும் ஆகஸ்ட் துவக்கத்தில் தொடங்கியது. தொடர் மழை காரணமாக பழங்கள் விரைவில் பறிக்க தயாராகியும், உதிர்ந்து வீணாகும் நிலையும் உருவானது. எதிர்பார்த்ததைவிட விளைச்சல் குறைவாக இருந்தபோதும், விலைஉயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பறிக்கப்படும் பழங்கள் மதுரை, திருச்சி மார்க்கெட்களுக்கு அனுப்படுகிறது. துவக்கத்தில் ஒரு கிலோ 25 முதல் 30 ரூபாய் வரை விற்கப்பட்ட நிலையில், ஆப் சீசன் நிறைவையடுத்து வரத்து குறைந்ததால், தற்போது ஒரு கிலோ 50 ரூபாய்க்கு விற்கிறது. முழுஅளவிலான சீசன் நவம்பர் மாதத்தில் துவங்கி பிப்ரவரி வரை நீடிநக்கும்.

**ஓணம் பண்டிகையால் காய்கறி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 04,2011,21:43 IST

ஒட்டன்சத்திரம்:கேரளாவில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு வியாபாரிகள் அதிகளவு காய்கறிகளை கொள்முதல் செய்ததால் வெண்டை, முருங்கை உள்ளிட்ட காய்கள் விலை கிடு கிடுவென உயர்ந்தது.கேரளாவில் வரும் வெள்ளி அன்று ஓணம் பண்டிகை கொண்டாடப்பட உள்ளது. கேரள மக்களின் காய்கறி தேவைகளை பூர்த்தி செய்ய, வியாபாரிகள் இப்போதிலிருந்து

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் குவிய துவங்கிவிட்டனர். வழக்கமாக, ஒவ்வொரு ஞாயிறு அன்றும் மார்க்கெட்டில் காய்கறி வரத்து அதிகம் இருக்கும். அன்று வியாபாரிகளும் அதிகளவு கொள்முதல் செய்வர். இந்த வாரம் ஓணம் வருவதால், நேற்று காய்கறி வரத்து வழக்கத்தைவிட அதிகம் காணப்பட்டது. வியாபாரிகளும் அதிக எண்ணிக்கையில் வந்து அதிகளவில் காய்கறிகளை வாங்கியதால் விலை உயர்ந்தது. சென்ற வாரம் கிலோ 8.50 ரூபாய்க்கு விற்ற செடி முருங்கை நேற்று 13 ரூபாய்க்கும், கிலோ ஆறு ரூபாய்க்கு விற்ற வெண்டை 13 ரூபாய்க்கு விற்றது. கமிஷன் கடை உரிமையாளர் ஒருவர் கூறுகையில், "ஓணம் பண்டிகைக்கு காய்கறிகளின் தேவை அதிகம் இருப்பதால் இன்னும் விலை கூடுவதற்கு வாய்ப்புள்ளது,' என்றார்.

**உலக சந்தைகளில் தானியங்கள் விலை உயர்வு : இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு வர்த்தக வாய்ப்பு**
செப்டம்பர் 04,2011,03:52



மும்பை : உலகளவில் அரிசி, கோதுமை, கொண்டைக்கடலை, சோயாபீன் உள்ளிட்ட உணவு தானியங்களின் விலை உயர்ந்துள்ளதால், இவ்வகை பொருட்களை ஏற்றுமதி செய்வோருக்கு, சிறப்பான வருவாய் வாய்ப்பு உள்ளதாக, ரபோபேங்க் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், கடந்த ஜூலை 1ம் தேதி நிலவரப்படி, அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள் கையிருப்பு, நிர்ணயிக்கப்பட்ட உபரி அளவான, 2.71 கோடி டன்னை விட, 50 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்து, 6.40 கோடி டன்னாக இருந்தது. ஆனால், ஆகஸ்ட் 1ம் தேதி நிலவரப்படி, இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் உள்ள உணவு தானியங்கள் கையிருப்பு, 6.12 கோடி டன்னாக குறைந்துள்ளது. உணவு தானியங்களை பாதுகாக்க, போதுமான கிடங்குகள் இல்லாமல், வெட்டவெளியில் வைக்கப்பட்டுள்ளதால், இந்த இழப்பு ஏற்பட்டுள்ளதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இது போன்று, உணவு தானியங்கள் பாழாவதற்கு பதில், அவற்றை ஏற்றுமதி செய்ய அனுமதித்தால், அரசும், வர்த்தகர்களும் பயன் பெறுவார்கள் என, கிரிசில் நிறுவனத்தின் தலைமை பொருளாதார வல்லுனர் டீ.கே.ஜோஷி தெரிவித்தார். மத்திய அரசு, குறைந்த அளவிலேயே அரிசி மற்றும் சர்க்கரை ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கியுள்ளது. உள்நாட்டில் உணவு தானியங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில், ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த, 2005-06ம் நிதியாண்டு, உள்நாட்டில் கோதுமைக்கு பற்றாக்குறை ஏற்பட்டதால், அதிக விலை கொடுத்து, கென்யாவில் இருந்து கோதுமை இறக்குமதி செய்யப்பட்டது. அதுபோன்று, 2008-09ம் நிதியாண்டில், உள்நாட்டில் சர்க்கரைக்கான தேவையை சமாளிக்க, மூலச் சர்க்கரை மற்றும் வரியற்ற வெள்ளைச் சர்க்கரை இறக்குமதிக்கு அனுமதி வழங்கியது. இதே நிலை, வரக்கூடாது என்ற நோக்கத்தில் தான், உணவு தானியங்களின் ஏற்றுமதிக்கு மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. ஆனால், தற்போது சர்வதேச சந்தையில், உணவு தானியங்களின் விலை உயர்ந்துள்ளதால், கட்டுப்பாடுகளை தளர்த்தி, ஏற்றுமதியை அனுமதிக்க வேண்டும் என்று இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். அமெரிக்காவின் சிகாகோ விளைபொருள் முன்பேர சந்தையில் (சி.பி.ஓ.டி) ஒரு டன் அரிசி விலை, 57 சதவீதம் உயர்ந்து, 371 டாலராக உயர்ந்துள்ளது. இது, கடந்தாண்டு, இதே காலத்தில், 235 டாலராக இருந்தது. தாய்லாந்து முன்பேரச் சந்தையில் ஒரு டன் அரிசி விலை, 420 டாலரில் இருந்து, 530 டாலராக அதிகரித்துள்ளது. சி.பி.ஓ.டி.,யில் ஒரு டன் கோதுமை, 208 டாலரில் இருந்து, 277 டாலராகவும், இந்தியாவின் என்.சி.டீ.ஈ.எக்ஸ் சந்தையில், இது, 1,151 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. உள்நாட்டில், டில்லியில், ஒரு குவிண்டால் கொண்டைக்கடலை விலை, 2,158ல் இருந்து 3,183 ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்தூரில், ஒரு குவிண்டால் சோயாபீன் விலை, 2,021ல் இருந்து, 2,411 ரூபாயாக அதிகரித்துள்ளது.

தினகரன்

**223 லட்சம் டன்னாக யூரியா உற்பத்தி உயரும்**

பதிவு செய்த நாள் : 9/5/2011 1:30:50



புதுடெல்லி : நடப்பு நிதியாண்டில் உள்நாட்டு யூரியா உற்பத்தி 223 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறை இணை அமைச்சர் ஸ்ரீகாந்த் ஜெனா மாநிலங்களவையில் இது குறித்து கூறியதாவது: விவசாயத்துக்கு தேவைப்படும் உரங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது யூரியா. இதன் தேவை அதிகரித்து வருகிறது. நடப்பு 2011&12 நிதியாண்டில் மொத்தம் 285 லட்சம் டன் யூரியா தேவைப்படும். இதில் 223 லட்சம் டன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும். இது கடந்த நிதியாண்டின் 218.8 லட்சம் டன்னாக இருந்தது.

அதாவது இந்த நிதியாண்டில் 4.2 லட்சம் டன் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும். மீதம் உள்ள 62 லட்சம் டன் யூரியா இறக்குமதி செய்யப்படும். இது கடந்த நிதியாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 66.1 லட்சம் டன்னைவிட 4.1 லட்சம் டன் குறைவு ஆகும். யூரியா உற்பத்தியை அதிகரிப்பதற்காக, மூடப்பட்ட உர தொழிற்சாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு இதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, சிந்த்ரி, கோரக்பூர், தல்சர் மற்றும் ராமகுண்டம் ஆகிய இடங்களில் உள்ள பெர்டிலைசர் கார்ப்ரேஷன் ஆப் இந்தியாவுக்கு சொந்தமான 4 ஆலைகளும் பரவுனி மற்றும் துர்காபூரில் உள்ள இந்துஸ்தான் பெர்டிலைசர் கார்ப்ரேஷனுக்கு சொந்தமான 2 ஆலைகளும் மீண்டும் செயல்படத் துவங்கும். இதுதவிர கொர்பா மற்றும் ஹால்டியாவில் 2 ஆலைகள் நிறுவப்பட்டு வருகிறது.

### 48% விவசாய குடும்பம் கடன் சுமையால் அவதி

பதிவு செய்த நாள் : 9/5/2011 1:31:41

புதுடெல்லி : நாட்டில் உள்ள 8.92 கோடி விவசாய குடும்பங்களில் 4.34 கோடி குடும்பங்கள் அதாவது 48.6 சதவீதம் பேர் கடன் சுமையால் அவதிப்படுகின்றனர். அதில் அதிகபட்சமாக ஆந்திர மாநிலத்தில் 82 சதவீத (49.49 லட்சம்) விவசாய குடும்பங்கள் கடன் சுமையால் அவதிப்படுகின்றன.

அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் 74.5 சதவீதம் குடும்பங்கள், பஞ்சாபில் 65.4 சதவீதம் குடும்பங்கள், கர்நாடகாவில் 61.6 சதவீதம், மகாராஷ்டிராவில் 54.8 சதவீத விவசாய குடும்பங்களும் அவதிப்படுகின்றன. கடன் சுமையை குறைக்கும் பொருட்டு விவசாய கடன் தள்ளுபடி மற்றும் கடன் விடுவிப்பு திட்டத்தின்படி (ஏ.டி.டபிள்யூ.டி.ஆர்.எஸ்) ஸி65,318 கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று நாடாளுமன்றத்தில் மத்திய விவசாய துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.